


தென்காசி மாவட்டம் தென்காசியில் உள்ள மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் பின் கவனிப்பு பிரிவு முதல் தளம் கட்டிடம் ரூபாய் 60 லட்சம் மதிப்பிலும், ஹோமியோபதி கட்டிடம் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதற்கான திறப்பு விழா நிகழ்வு மாவட்ட ஆட்சியர் ரவிச்சந்திரன் தலைமையில் தனுஷ் எம் குமார் எம். பி.தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன்,பழனி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ரூபாய் 75 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி, நகர்மன்றத் தலைவர் சாதிர்,ஆறுமுகச்சாமி, மருத்துவபணி இணை இயக்குனர் பிரேமலதா உள்பட பலர் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி பெருந்தெரு பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நியாய விலைக் கடையினை சட்டப் பேரவை தலைவர் அப்பாவு, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினர். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், ஞானதிரவியம் எம்.பி.,ரூபி மனோகரன் எம்எல்.ஏ மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

## ஆளுநரின் தேநீர் விருந்து: முதல்வர் புறக்கணிப்பு!

முதல்பக்கத் தொடர்ச்சி

இளைஞர்களையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஏழு ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடந்து வரும் நீட் எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஆளுநர் பொறுப்பில் இருப்பவர் பொறுப்பின்றிப் பேசுகிறார்.

தமிழ் மக்களைப் பற்றி அக்கறையுள்ளோர், தமிழர் உயிர் துறப்பதைக் கண்டு கலங்குவர். ஆனால், ஆளுநர் ரவியின் செயல்பாடுகள், 'அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை' என்பது போல உள்ளது. இந்த நிலை மாறவே, நீட் தேர்வுக்கு விலக்கு கோரி, சட்டம் இயற்றி, தமிழ்நாடு அரசு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது. குடியரசுத் தலைவர் அவர்கள், இதற்கு ஒப்புதல் வழங்கக் கோரி, இன்று (14.8.2023) கடிதம் அனுப்புகிறேன்.

ஆளுநர் அவர்கள், அரசியல் ரீதியாக திராவிடம், ஆரியம், தி.மு.க., திருவள்ளுவர், வள்ளலார், சனாதனம் பற்றிப் பேசி வருவதை நாங்கள் மதிக்கவில்லை. அது கபட வேடம் என்பதை அறிந்தே இருக்கிறோம்; ஆரியப் புலம்பலாக ஒதுக்கித் தள்ளுகிறோம். ஆனால், ஏழை எளிய, விளிம்பு நிலை அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை அப்படித்தான் சிதைப்பேன் என்று நியமனப் பதவியில் இருக்கும் ஒரு ஆளுநர் கொக்கரிப்பார் என்றால், இது கல்வித் துறை மீது நடத்தப்படும் சதியாகவே கருதுகிறோம். தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலம் எங்களுக்கு முக்கியமானது. நாங்கள் இந்த மாநிலத்திற்கு, இந்த ஆண்டு வந்து, அடுத்த ஆண்டு செல்பவர்கள் அல்ல. ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்காக என்றென்றும் உரிமைக் குரலை எழுப்பும் ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

பல்கலைக் கழகங்களைச் சிதைத்தும் உயர் கல்வித் துறையைக் குழப்பியும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி தராமலும் இதன் உச்சமாக தமிழ்நாட்டு மாணவர்களை, பெற்றோர்களை, அவர்களது எதிர்காலத்தைச் சிதைக்கும் வகையில் பேசி வரும் ஆளுநரை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதன் அடையாளமாக ஆகஸ்ட் 15 அன்று, ஆளுநர் மாளிகையில், அவர் ஏற்பாடு செய்திருக்கும் தேநீர் விருந்தினைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

## ரூ.80.56 கோடியில் கட்டுமானப் பணிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 15–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.08.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 80 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில்களில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம், திருக்குளப் பணிகள், பக்தர்கள் தங்கும் விடுதி, வணிக வளாகம், தடுப்புச் சுவர்கள், முடிகாணிக்கை மண்டபம், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், உணவருந்தும் கூடம், அடுக்குமாடி குடியிருப்புகள், கல்லூரி ஆய்வகங்கள் போன்ற புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்து சமய அறநிலையத்துறை அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 866க்கும் மேற்பட்ட திருக்கோயில் களுக்கு குடமுழுக்கு, திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மீட்பு, அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றபட்டு வருகின்றன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுநாள்வரை 6,962 திருக்கோயில்களில் 3,373 கோடி ரூபாய் செலவில் 9,294 திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம் தேக்கம்பட்டி, வனபத்ர காளியம்மன் திருக்கோயிலில், 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்று பிரகார மண்டபம், நடைபாதை மண்டபம், சுற்றுச்சுவர் மற்றும் முடிகாணிக்கை மண்டபம் அமைக்கும் பணிகள்; மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெப்பக் குளத்தையொட்டி தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் கந்த சஷ்டி மண்டபம் கட்டும் பணிகள்;

திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 4.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் காத்திருக்கும் கூடம், உணவருந்தும் கூடம் கட்டும் பணிகள்;

சேலம் மாவட்டம் மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 4.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி, உணவருந்தும் கூடம் மற்றும் செயல் அலுவலர்கள் குடியிருப்பு கட்டும் பணிகள்; சென்னை பள்ளிக்கரணை, வீரத்தம்மன் திருக்கோயிலில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை, முத்து மாரியம்மன் திருக்கோயிலில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; தஞ்சாவூர் மாவட்டம் தாமரங்கோட்டை, கண்டேஸ்வரர் திருக்கோயிலில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; திருவள்ளூர் மாவட்டம் சிறுவாபுரி, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 3.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளத் திருப்பணி; கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், திருவிக்ரம சுவாமி திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெப்பக்குளம் மற்றும் தீர்த்தக்குளங்களை சீரமைத்து நீராழி மண்டபம் கட்டும் பணி;

கடலூர் மாவட்டம் சிதம்பரம், தில்லையம்மன் திருக்கோயிலில் 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; சென்னை சைதாப்பேட்டை, காரணீஸ்வரர் திருக்கோயிலில் 2.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயி லில் 1.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; திருவாரூர் மாவட்டம் வலங்கைமான், மகா மாரியம்மன் திருக்கோயிலில் 1.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்காணிக்கை மண்டபம் மற்றும் பக்தர்கள் இளைபாறும் மண்டபம் கட்டும் பணி; திருச்சிராப்பள்ளி மாவட்டம் குமாரவயலூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 1.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன் மண்டபத்தை சீரமைக்கும் பணி;

சென்னை திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் 8.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணிகள்; மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் கட்டும் பணி; நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல், நவநீதேஸ்வர சுவாமி திருக்கோயி லில் 1.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், காளிகாம்பாள் காமாட்டீஸ்வரர் திருக்கோயிலில் 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மலர் வணிக வளாகம் கட்டும் பணி; திண்டுக்கல் மாவட்டம் பழனி, பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 5.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வகங்கள் கட்டும் பணி;

என மொத்தம் 80 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டம் நாங்குநேரி சம்பவத்தில் அதிர்ச்சியில் உயிரிழந்த

## கிருஷ்ணன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிவாரண நிதி!

### சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

நெல்லை.ஆக.15 -

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பள்ளி மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் அதிர்ச்சியில் உயிரிழந்த மாணவனின் தாத்தா குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 3 லட்சத்திற்கான காசோலையினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம்,ரூபி மனோகரன் எம். எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினர்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பெருந்தெரு பகுதியில் பள்ளி மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் அதிர்ச்சியில் மாணவனின் தாத்தா கிருஷ்ணன் உயிரிழந்தார்.அன்னாரது வீட்டிற்கு நேரில் சென்று முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 3 லட்சத்துக்கான காசோலையினை அன்னாரது குடும்பத்தினரிடம் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு,ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

பின்னர் அப்பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நியாய விலைக்கடையினை சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினர்.

அப்போது அப்பகுதி மக்கள் தங்களது பகுதியில் சி.சி.டி.வி. கேமரா வைத்து தர வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். அவரது கோரிக்கை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.என அமைச்சர் கயல்விழி சொல்வராஜிடம் தெரிவித்தார்.

### 2023 -ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு

## 15 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள்!

சென்னை, ஆக. 15 -

பொது மக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல்துறை அதிகாரிகளுக்கு 2023-ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் வழங்கப்படும்:

1.க.வெங்கடராமன், இ.கா.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர், குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை.

2. அஸ்ரா கர்க், இ.கா.ப., காவல்துறை தலைவர்/ கூடுதல் காவல் ஆணையாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு (வடக்கு), ன்னை பெருநகர காவல்.

3. சு.ராஜேந்திரன், இ.கா.ப.,காவல்துறை துணைத் தலைவர், குற்றப்புலனாய்வுத் துறை நுண்ணறிவு, சென்னை.

4. திருமதி. ப.ஹீ. ஷாஜிதா, காவல் கூடுதல் துணை ஆணையாளர், இணையவழி குற்றப் பிரிவு, சென்னை பெருநகர காவல்.

5. ஹா. கிருஷ்ணமூர்த்தி, காவல் துணைக் கண்காணிப்பாளர், தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை.

இதே போன்று புலன் விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட 10 காவல் துறை அதிகாரிகள் 2023-ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

1. வே. அனில் குமார், காவல் உதவி ஆணையர், கொங்கு நகர் சரகம், திருப்பூர் மாநகரம்.

2. கோ. சரவணன், காவல் துணைக் கண்காணிப்பாளர், குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, மதுரை சரகம்.

3. ர. மாதையன், காவல் ஆய்வாளர், சூலூர் காவல் நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. திருமதி. மா. அமுதா, காவல் ஆய்வாளர், பீலமேடு காவல் நிலையம், கோயம்புத்தூர் மாநகரம்.

5. திருமதி. ம. அனிதா, காவல் ஆய்வாளர், மாசார்பட்டி காவல் நிலையம், தூத்துக்குடி மாவட்டம்.

6. திருமதி. இரா. விஜயா, காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்

7. திருமதி. ஆ. மகாலெட்சுமி, காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், அரியலூர் மாவட்டம்.

8. திருமதி. அ.சித்திரா தேவி, காவல் ஆய்வாளர், இணைய குற்றப்பிரிவு, திருப்பூர் மாவட்டம்.

9. திருமதி. ந. மணிமேகலை, காவல் ஆய்வாளர், நில அபகரிப்பு தடுப்பு பிரிவு, சென்னை பெருநகர காவல்.

10. மறைந்த காவல் ஆய்வாளர் கு.சிவா, குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வு துறை, திருச்சிராப்பள்ளி.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப்பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பிரிதொரு விழாவில் வழங்கப்படும் என்று உள்துறைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

### பிரபல பாடகர்

## பத்ம ஸ்ரீ டி.எம்.சௌந்தரராஜன் திருவுருவச் சிலை திறப்பு விழா

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் பிரபல பாடகர் பத்ம ஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் திருவுருவச்சிலை நாளை (16.08. 2023 - புதன்கிழமை) மாலை 7.00மணிக்கு மதுரை முனிச் சாலை தினமணி திரையரங்கம் அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**கோ.தளபதி எம்.எல்.ஏ.**
செயலாளர்
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

### நாங்குநேரியில் சக மாணவர்களால் வெட்டப்பட்டு படுகாயமடைந்த

## மாணவருக்கு உயர் சிகிச்சை அளிக்க சென்னை ஸ்டான்லி மருத்துவர்கள் வருகை!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



நெல்லை.ஆக.15-

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் சக மாணவர்களால் வெட்டப்பட்டு படுகாயம் அடைந்த பனிரெண்டாம் வகுப்பு மாணவருக்குத் தேவையான உயர் சிகிச்சை அளிக்க சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து மருத்துவர்கள் வரவழைக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியில் பள்ளி மாணவர்கள் வீட்டிற்குள் புகுந்து மாணவர் மற்றும் அவரது சகோதரியை,சகமாணவர்கள் வெட்டி படுகாயம் ஏற்படுத்தினர்.இது பற்றிய தகவல் அறிந்ததும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நெல்லை மருத்துவ கல்லூரி பல்நோக்கு மருத்துவமனை சிகிச்சை பெற்றுவரும் மாணவர் அவரது சகோதரி ஆகியோரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன்,ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர். தொடர்ந்து மருத்துவர்களிடம் மாணவர்களுக்கு செய்யப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தனர். செய்யப்படக்கூடிய சிகிச்சைகள் தேவையான நடவடிக்கைகள் குறித்து மருத்துவமனை முதல்வர் மற்றும் மருத்துவரிடம் கேட்டறிந்தனர்.அதனை தொடர்ந்து ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தேவையான அனைத்து நிவாரணங்களையும் உடனுக்குடன் வழங்குவதற்கு ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். அவர்களுடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞான திரவியம்,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப், ரூபி மனோகரன்,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ்,பாளையங்கோட்டை ஒன்றிய குழு தலைவர் தங்கபாண்டியன்

மருத்துவக் கல்லூரி டீன் ரேவதிபாலன் ஆகியோர் உடன் சென்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது.

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் நடைபெற்ற சம்பவம் குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன் மாணவர்களுக்கு தேவையான உயிர் சிகிச்சை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது மாணவர்களுக்கு தேவையான மனநல ஆலோசனைகள் வழங்கவும் மருத்துவர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிகிச்சை தொடர்பாக நேரடியாக அறிந்து கொண்டு தேவையான சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களை அறிவுறுத்தி உள்ளோம்.ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் பாதிக்கப்பட்ட நபர்கள் இருக்கும் பகுதியில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தியவுடன் அப்பகுதியில் நியாவிலை கடையும் திறந்து வைத்துள்ளார்.இந்த சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியில் உயிரிழந்த குடும்பத்தினர்க்கு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளது.பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு கூடுதல் சிகிச்சை அளிக்க சென்னை ஸ்டான்லி மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு, இங்கே அவர்கள் தங்கி இருந்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.ஸ்டான்லி மருத்துவமனையில் கையை புதிதாக மாற்றும் நவீன சிகிச்சை அளிக்கும் வல்லுனர் உள்ளனர். இரண்டு குழந்தைகளுக்கும் தேவையான வேலை வாய்ப்பு அரசு சார்பில் வழங்க பாதிக்கப்பட்ட மாணவன் தாயார் கோரிக்கை வைத்துள்ளார். அவர்களுக்கு தற்போது வேலைக்கு செல்லும் வயது இல்லை,என்பதால் முதலமைச்சரின் உத்தரவை பெற்று அவர்கள் வேலைக்கு செல்லும் வயது வந்தவுடன் மக்கள் நல்வாழ்வு துறையில் வேலை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இருவரும் குணமடைந்து பின்னர் அவர்களுக்கு கல்வி வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கையையும் அரசு சார்பில் எடுக்கப்படும்.

கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் காய்ச்சல் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு வெறி நாய் கடி தொடர்பான சிகிச்சை அளிக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்படும்.தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் 6 லட்சம் நோயாளிகள் தினந்தோறும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.இந்த ஒரு நோயாளிக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் குறைபாடு இருப்பதாக கருதி ஒட்டுமொத்த அரசு மருத்துவமனையில் செய்யும் மருத்துவத்தையும் குறை கூற முடியாது. பிற மாநிலங்களை விட தமிழகத்தில் தான் சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.